


நகர் ஊரமைப்பு துறை (DTCP)
நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
எருமப்பட்டி ஊராட்சி ஒன்றியம்

நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் வட்டம், சிவநாயக்கன்பட்டி ஊராட்சி / கிராமம், ச.எண்- 321/2 -ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான மனைகள் அமைப்பு தொழில்நுட்ப ஒப்புதல் வரைப்படம். (திட்டமில்லாத பகுதி)

அளவு : 1 : 600

இணையதள விண்ணப்ப எண் : **NK4L0M8P / 15617 / 2023 - NKL**

I.குறிப்பு :

மனைப்பிரிவின் பரப்பு : 1.14 ஏக்கர் (அ) 4600.00 ச.மீ

கோரிய மனைகள் : 26

ஒதுக்கிய மனைகள் : 26

மனைப்பிரிவு எல்லை ----------

நிலையில் உள்ள சாலை ----------

II.பொது ஒதுக்கீடு :

(உத்தேச சாலை பரப்பளவு நீங்கலாக மீதமுள்ள மனைப்பிரிவு பரப்பளவிற்கு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது)

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை:

உத்தேச சாலைகள் (ம) மூலை மடக்குகளின் பரப்பளவு = 948.30 ச.மீ.

பொது உபயோகம் TNCDBR 47(8) ன் படி தானமாக ஒப்படைக்கப்பட்ட 1% ஒதுக்கீடு:

I. உள்ளாட்சிக்கான ஒதுக்கீட்டின் பரப்பளவு = 23.20 ச.மீ (0.64%)

II. TANGEDCO கான்ன ஒதுக்கீட்டின் பரப்பளவு = 19.60 ச.மீ (0.54%)

திறவெளிகள் - (அரசாணை எண் -18 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள் 04-02-2019-ன் படி அரசு வழிகாட்டி மதிப்பின்படி தொகையை செலுத்தப்பட்டுள்ளது)

மூலை மடக்கு : (12.00 மீ) அகல சாலை வரை 1.50மீ x 1.50மீ விடப்படல் வேண்டும்

III.நிபந்தனைகள் :

1. அரசாணை எண் -18,16 ந.நி (ம) கு.வதுறை நாள் 04.02.2019, 31.01.2020 -ன் விதிகள் அனைத்தும் பொருந்தும்.
2. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத் துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், எந்தத் துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் உள்ளாட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும்.
3. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால், அல்லது மனைப்பிரிவுக்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதில் ஏதேனும் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு துறை அவர்களால் இரத்து செய்யப்படும்.
4. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைப்பட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
5. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைப்படத்தினை எவ்வித மாற்றம் இன்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6'x4' அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரகசிக்கப்பட வேண்டும்.
6. The Tamilnadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated : 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016.The Promoter has to Advertise, market, book, sell or offer sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only After Registering the Real Estate Project with in the Real Estate Authority.
7. பாசன வாய்க்கால் கால்வாய்கள் மற்றும் இயற்கை மழைநீர் வடிகால் ஆகியவை தடைபடாமல் எவ்வித ஆக்கிரமிப்பின்றியும் வெள்ளப்பெருக்கத்தினால் அருகிலுள்ள பகுதிகள் பாதிக்கப்படாமலும் இம்மனைப்பிரிவு அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.
8. பிரஸ்தாப மனைப்பிரிவு இடத்தினை அடுத்துள்ள சாலையின் மட்டத்திலிருந்து 0.45 மீட்டர் உயர்த்தப்பட்ட பின்னரே மனைப்பிரிவு சாலைகள் அமைக்கப்பட வேண்டும்.
9. உத்தரவு கடிதத்தில் குறிப்பிட்டுள்ள சிறப்பு நிபந்தனைகள் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் தவறாது கடைபிடிக்கப்பட வேண்டும்.

ம.வ/மா.ந.ஊ.அ (NKL) SWP எண் - 5 / 2024

உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
நாமக்கல்.

ச.பிரபுசங்கர்
அளவர் / உதவி வரைவாளர்

ச.சுரேந்திரன்
மேற்பார்வையாளர் / வரைவாளர் நிலை - II

Signature valid
Signed by: Assistant Director
Location: Namakkal
Date: 2024.01.02 17:31:10

Signature valid
Signed by: Village Panchayat President
Location: Namakkal
Date: 2024.05.30 13:18:05

மு.தேன்மொழி
மேற்பார்வையாளர் / வரைவாளர் நிலை - II